


# “சுயமரியாதையைக் காக்கவே சுயாட்சி கேட்கிறோம்!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க 75 அறிவுத்திருவிழா’ நிகழ்ச்சியின் ஒருபகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக்கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் மூன்றாம் அமர்வில் ‘STATE AUTONOMY IS OUR BIRTH RIGHT’ என்னும் தலைப்பில், ஊடகவியலாளர் இந்திரகுமார் தேரடி அவர்கள் ஆற்றிய உரை :**

“திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியின் சார்பில், இப்படி ஓர் அறிவுத் திருவிழா நிகழ்கிறது. இதில் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஓர் அமர்வில் நீங்கள் பேச வேண்டும் என்று அழைத்தபோதே, எனக்குள் ஒரு நடுக்கமும் அச்சமும் ஏற்பட்டது. ஏனென்றால், இது கிட்டத்தட்ட மாநில மாநாட்டைப் போன்ற நிகழ்வு. அதில் ஓர் அங்கமாக நானும் கலந்து கொள்கிறேனே என்ற பயம் ஒருபுறம். தோழர்கள் ராஜீவ்காந்தி, மதிவதனி, செந்தில்வேல் போன்றவர்கள் இருக்கும் அவையில் சரியாகப் பேச வேண்டுமே என்ற பயம்தான் அது.

நான் அஞ்சுவது, நாம் சரியாகச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே! நாம் எதையும் தவறவிட்டுவிடக் கூடாது என்ற நோக்கத்திற்காக!



**இந்திரகுமார் தேரடி**
**ஊடகவியலாளர்**

## திருடுவதற்குப் பயமில்லை!

ஆனால், ஒட்டுமொத்த தேசமும் பார்த்துக் கொண்டிருக்கிறது; நம்மை வாக்களித்துத் தேர்ந்தெடுத்த மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்; ஆனால் எந்த அச்சமும் இல்லாமல், இயந்திரத்தை வைத்து வாக்குகளைத் திருடிக்கொண்டிருக்கிற ஒரு நாட்டில், தொடர்ந்து உரையாற்ற வேண்டும்; தொடர்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்!

சிலர் கேள்வி எழுப்புகிறார்கள்: ‘நான்கு ஆண்டுகள் முடிந்துவிட்டது; ஐந்தாம் ஆண்டு முடியப் போகிறது. இந்த ஐந்து ஆண்டுகளில் நீங்கள் என்ன செய்தீர்கள்? எப்போது கேட்டாலும் ‘போராட்டம், போராட்டம்’ என்றே சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே? கல்வியில் நிதி கேட்டால் போராட்டம் என்று சொல்கிறீர்கள். பேரிடர் மேலாண்மைக்கு நிதி கேட்டால் போராட்டம் என்று சொல்கிறீர்கள். செலுத்திய வரியைத் திரும்பத் தர வேண்டுமென்றால் போராட்டம் என்று சொல்கிறீர்கள். இப்படி எதைக் கேட்டாலும் போராட்டம் என்று சொல்லுகிறீர்களே, ஐந்து ஆண்டுகள் உங்களுக்குப் போதாதா? 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உங்களுக்குப் போதாதா?’ என்று. இது வெறும் நிதிப் போராட்டம் மட்டும்தானா?

## காவிமயமாகும் கல்வி!

சென்ற ஆண்டு டெல்லி பல்கலைக்கழகத்தில் இருக்கக்கூடிய ஒரு கல்லூரியில் மாணவர்கள் உள்ளே போகும்போது ஏதோ ஒரு துர்நாற்றம் அடித்திருக்கிறது. கேம்பஸில் எலி ஏதாவது செத்துக் கிடக்கிறதா என்று பார்த்தால், தரையெல்லாம் சுத்தமாக இருக்கிறது. வேறு என்ன துர்நாற்றம் என்று சுவரைப் பார்த்தால் மஞ்சளும் பச்சையுமாகக் காட்சியளிக்கிறது.

அந்தக் கல்லூரி முதல்வர், அந்த மாணவர்களுக்குப் பாரம்பரியத்தை உணர்த்துவதற்காக, சாணியை எடுத்துப் பள்ளி வகுப்புகளுக்குப் பூசி, சுவரில் மெழுகி வைத்திருக்கிறார். இதைப்பற்றிக் கல்லூரி முதல்வரிடம் கேட்டபோது, “ஆமாம், அது கிருமிநாசினி” என்கிறார். உலகத்திலேயே நல்ல அறிவாளிகள் எல்லாம் எங்கிருந்து உருவாகிறார்கள் என்றால், டெல்லி பல்கலைக்கழகம், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் என்று சொல்வார்கள்.



அந்தத் டெல்லி பல்கலைக்கழகத்தில் மாட்டுச் சாணத்தால் மெழுகியிருக்கிறார்கள்.

இன்னொரு பக்கம், பள்ளிக்கூடங்களில் பாடப் புத்தகத்திலிருந்து பல விஷயங்கள் நீக்கப்பட்டுள்ளன. தமிழருடைய வரலாற்றுப் போராட்டங்கள் தேசிய அளவிலான பாடத்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளன. கீழடி குறித்த குறிப்புகள் இடம்பெறாமல் தவிர்க்கப்பட்டுள்ளன.

## உணர்வு பெற வேண்டும்!

நம்முடைய பிரச்சினை என்ன? சமக்ர சிக்ஷா அபியான் திட்டத்திற்கு நிதி கொடுக்கவில்லை. ஏன் நிதி கேட்கிறோம்? தமிழர்கள் கல்வி பயில வேண்டும் என்பதற்காக! ஏன் கல்வி பயில வேண்டும் என்று விரும்புகிறார்கள்? முன்னேற்றம் அடைவதற்காக! முன்னேற்றம் அடைய வேண்டும் என்கின்ற சிந்தனை எங்கிருந்து பிறக்கிறது? அவன் யார் என்ற உணர்விலிருந்து பிறக்கிறது! அவன் யார் என்ற உணர்வு அவனுக்கு எப்படி வருகிறது? சுயமரியாதை என்கிற பெரியார் ஊட்டிய உணர்விலிருந்து வருகிறது!



அதனால் அவன் படிக்க வேண்டும் என்று கேட்கிறான். படிப்பதற்கு மருத்துவக் கல்லூரியில் இடம் வேண்டும் என்று கேட்கிறான். இடம் கொடுத்தால், படிப்பதற்கு நிதி வேண்டும் என்று கேட்கிறான். நிதி கொடுத்தால், படித்து முடித்துவிட்டு வேலை வேண்டும் என்று கேட்கிறான். இதையெல்லாம் ஒழிக்க வேண்டும் என்றால், அவனுக்கு உள்ளே இருக்கக்கூடிய உணர்வை ஒழித்துவிட்டால் போதும்! அவன் எதையும் கேட்கமாட்டான்! என்பதற்காகத்தான், ஆர்.எஸ்.எஸ்.-ஸின் மூலமாக நாடு முழுவதும் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் காவி அடித்துக் கொண்டிருக்கிறது இந்த மோடி அரசு!

## சுயமரியாதைக்கான போராட்டம்!

முப்பெரும் விழாவிற்குச் சென்றிருந்தபோது, பல பேரை நேர்காணல் செய்வதற்கான சூழல் கிடைத்தது. எல்லாம் பொதுமக்கள்தான். தொண்டர்கள்தான். சாதாரணத் தொண்டர்கள்தான்.

அதில் ஒருவர் நல்ல பெரிய மீசை வைத்திருந்தார். அவரிடம், “என்னங்க மீசையெல்லாம் பெருசா இருக்கு!” என்று கேட்டபோது, அவர் சொன்னார், ‘ஒரு காலத்தில் என் ஊருக்குள் நான் செருப்பைப் போட்டுக்கொண்டு நடக்க முடியாது. இன்றைக்கு நான் செருப்பு போட்டுக்கொண்டு நிற்கிறேன். ஒரு காலத்தில் நான் துண்டே போட முடியாது. இன்றைக்குத் தோளில் துண்டு போட்டு நடக்கிறேன். ஒரு காலத்தில் நான் மீசை வைக்க முடியாது. அதையெல்லாம் எதிர்த்து இந்த இயக்கம் உணர்வை ஊட்டி இருக்கிறது. அதனால், அதை வெளிப்படுத்த இந்த மீசையை நான் வைத்திருக்கிறேன்!” என்று.

## ஆர்.எஸ்.எஸ் பின்னணி

இப்படி உணர்வுள்ள கூட்டத்தை, உணர்வில்லாததாக மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் தேசியக் கல்விக் கொள்கை எனும் திட்டத்தைப் புகுத்துகிறார்கள். இந்தக் கொள்கையை எங்கிருந்து எடுத்து வந்தார்கள் என்றால், மேற்கு வங்காளத்தில் உள்ள ஆர்.எஸ்.எஸ் நடத்தும் வித்யா பாரதி பள்ளிக்கூடங்களிலிருந்து அந்த வித்யா பாரதி பள்ளிக்கூடங்களைச் சேர்ந்த ஐந்து பேர், தேசிய அளவில் என்.சி.இ.ஆர்.டி. என்று சொல்லப்படுகின்ற, சி.பி.எஸ்.இ. (CBSE) பாடப் புத்தகங்களைத் தீர்மானிக்கின்ற குழுவில் இடம்பெற்றார்கள். அதன் மூலமாக, என்.சி.இ.ஆர்.டி. பாடப் புத்தகத்தில் ‘இந்திய ஞான அமைப்புமுறை’ (INDIAN KNOWLEDGE SYSTEM) என்று, வேதகால, புராண கால கட்டுக் கதைகள் நிரப்பப்பட்டன.

இப்போது யோசித்துப் பாருங்கள். நம் கல்விக்கு நிதி கேட்கின்ற விவகாரமும், கல்வியைக் காவிமயமாக்கும் முயற்சியும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. இந்தத் தீய கும்பலைப் பள்ளிக்கூடங்களிலிருந்து விரட்ட வேண்டும் என்றால், இந்தப் பிள்ளைகளையெல்லாம் ஆர்.எஸ்.எஸ். கும்பலிடமிருந்து காப்பாற்ற வேண்டும் என்றால், நாம் செய்ய வேண்டியது என்ன? அந்தப் பிள்ளைகளுக்கு நல்ல கல்வியைக் கொடுப்பது!

### அனைவரும் போற்றும் அறிவுத்திருவிழா!

**கே.படிக்காசு என்பவர் எழுதிய முகநூல் பதிவில் இருந்து...**

‘நேற்றைய அறிவுத்திருவிழா நிகழ்வில், உதயநிதி ஸ்டாலின் பேசும்போது ‘வள்ளுவர் கோட்டம் ராசி இல்லாத இடம்னு சொல்வாங்க. அங்கே போய் அறிவுத்திருவிழாவை நடத்தணுமானு கேட்டாங்க. ராசிக்கும், பகுத்தறிவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை, இங்கேதான் நடத்தணும்னு நடத்தி முடிச்சோம்’ என்று சொன்னார்.

எல்லா இயக்கங்களிலும் வாரிசுகள் வருவது இயல்பு ஆனால், அவர் கொள்கை வாரிசாக மிளிர்வது அரிது. அண்ணன் உதயநிதி அய்யா, அண்ணா, கலைஞர் வகுத்த கொள்கை வாரிசாக மிளிர்கிறார்.’

அந்தக் கல்வியைக் கொடுக்கின்ற உரிமையை எனக்குத் தா என்று கேட்பது வெறும் காசு சம்பந்தப் பட்ட பிரச்சினையா, உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினையா என்பதை யோசித்துப் பாருங்கள்.

## மாநில சுயாட்சி - ஏன் தேவை?

இதையெல்லாம் செய்ய வேண்டும் என்றால், செய்ய நினைப்பவர்களுக்கு அதிகாரம் வேண்டும். அந்த அதிகாரத்திற்குப் பெயர்தான் மாநில சுயாட்சி!

இந்திய உணவுக் கழகம் (Food Corporation of India) இருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்திவிட்டால், நம் நாட்டில் யாருக்கும் சோறு கிடைக்காது. ஆனால், தமிழ்நாட்டுக்குக் கிடைக்கும். எப்படி என்றால், உணவுப்பொருள் வழங்கல் துறையை உருவாக்கி, கலைஞர் தமிழர்களுக்கு உணவுப் பஞ்சமே இல்லாத நிலையை உருவாக்கியிருக்கிறார்.

## உள்ளாட்சி நாயகன்

2007-இல் இன்றைய முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு உள்ளாட்சித் துறைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். அந்த 2007-இல் ஒரு முக்கியமான விவகாரம் நடக்கிறது. அன்றைய ஒன்றிய அரசு என்ன செய்கிறது என்றால், பஞ்சாயத்து ராஜ் என்று அழைக்கப்படுகின்ற பஞ்சாயத்துச் சட்டங்களை எல்லாம் மாநிலப் பட்டியலிலிருந்து பொதுப் பட்டியலுக்கு மாற்றுவதற்காக ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்கள். அதை எதிர்த்துக் குரல் கொடுத்த ஒரே மாநிலம் தமிழ்நாடுதான்! அதை எதிர்த்து அன்றைக்குக் குரல் கொடுத்தவர் இன்றைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மட்டும்தான்! உள்ளாட்சிகள் இன்று நல்லபடியாக இருக்கிறது என்றால், அதை தேசிய அளவில் காப்பாற்றிக் கொடுத்ததே நம்முடைய முதலமைச்சர்தான்.

எந்தக் கட்சியிடம் மாநில சுயாட்சி வேண்டும் என்று போராடினோமோ, இன்றைக்கு அதே கட்சி நம்மோடு வந்து மாநில உரிமைகளுக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறது! வெல்ல முடியாதவர்களை எல்லாம் வென்று காட்டியது இந்த திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் மகத்தான மக்கள் இயக்கம்!

தமிழ்நாட்டின் உணர்வு என்று ஒன்று இருக்கிறது என்றால், அந்த உணர்வை உருவாக்கியவர் தந்தை பெரியார் என்றால், அதை வீடுதோறும் நமக்குக் கொண்டுவந்து ஊட்டியது பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், இன்றைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின். நாளை நம்முடைய துணை முதலமைச்சர் தொடர்ந்து இந்தப் பணிகளை மேற்கொண்டேதான் இருப்பார். இந்த இலட்சியவாதத்தைத் தொடருவோம்! மாநிலத்திற்கான உரிமைகளை வென்றெடுப்போம்! ●